ALPHA MIND POWER

# NEWSLETTER



April 2017

## From Guruji's desk....



My Dear Alpha Siddhas,

Writing to you once again with a lot of love and blessings.

I was in Madurai last week for the classes. There was a gentleman who was around 60 years of age in our level 1 class. As we started talking about relationships, he raised a question. . "I have been married for about 35 years. Right from the beginning, my wife has been a very negative person. She is always raising her voice, always criticising whatever I do, always speaking in a way which hurts not only me but everyone in the house. Life has become unbearable for me because of her. What can I do to make her change?"

When I explained that he could speak to her subconscious mind in Alpha and bring about a change he was quite happy that there was something he could do about the situation.

However, this made me think. These days, I am coming across similar situations too often. One person in the house being negative and angry makes life miserable for so many people there. It sounds quite unfair. One person makes everyone writhe in pain each and every day. One person robs so many people of their peace of mind. One person makes the house a hell instead of a heaven. Why?

I have spoken to many such negative people in my counselling sessions. I found that such a person is unhappy about something in his life. It may be an incident or an injustice in his/her perception. Sometimes it is a lost opportunity or the loss of a dear one. The reasons are many. But, what is important to note here is that this person is not aware that he is losing not only his chance of living a good life but also taking that chance away from many people.

All that is required is that he sheds the burden of the past and starts living in the present. I know it is easier said than done. But, if you think about what we lose by carrying the burden of our past, you will agree it is time to shed that burden and start living the way a human being should. You can find happiness within yourself and also spread it to people around.

Some people are able to do this easily. Does it mean they do not have any problems in life? Does it mean they do not have unhappy memories? No. It simply means such people have been able to overcome all that and find happiness. Alpha has given us tools to handle any situation in life. Negative energy should never be created by an Alpha Siddha. At Alpha we can get rid of all unwanted memories and emotions from our mind and reprogram it with positive thought patterns and emotions. This can be done with our 'Negative Thoughts Removal' meditation.

It is done in a much more profound way in our workshop **"SHANTAGNI"** which is held at Rishikesh.

It is my wish that as an Alpha Siddha you manifest all your goals and desires. But my highest wish is that every Alpha Siddha is able to purify his mind with Alpha. Every Alpha Siddha should reprogram his mind with Alpha and fill his life with absolute positive energy. Every Alpha meditation purifies you. Keep meditating.

Let every Alpha Siddha shine like a beacon of light spreading brightness in the lives of many many people. **"LET EVERY HUMAN MIND GENERATE ONLY POSITIVE THOUGHTS".**

Wishing you wonderful meditations.
Blessings,

*Srimatha*

### *Rishikesh Camp With Guruji*

***19.04.2017 to 01.05.2017***

**Program A** (3days) : Vashista gufa, Haridwar & Ganga Pooja/Aarthi

**Program B** (2 days) : Babaji Cave

**Program C** (5 days) : **"Shantagni"** – Reprogram your mind- Residential Retreat at Ashram

(10 days + 2 days travel + 1 day rest = Total 13 days)
You can attend all the programs or any combination.

**Eligibility**

**For Program A & B** : Level -1
**For Program C** : Level-3

For further enquiries please contact AMP office: +919841272146

### குருஜியுடன் ரிஷிகேஷ் முகாம்

19.04.2017 முதல் 01.05.2017

**நிகழ்ச்சி A** (3 நாட்கள்) : வசிஷ்டர் குகை, ஹரித்துவார், கங்கா பூஜை/ஆர்த்தி

**நிகழ்ச்சி B** ( 2 நாட்கள்) : பாபாஜி குகை

**நிகழ்ச்சி C** ( 5 நாட்கள்) : சாந்தக்னி - மனதை தூய்மைபடுத்து - ஆசிரமத்தில் நடக்கும் வகுப்பு

10 நாட்கள் + 2 நாட்கள் பயணம் + 1 நாள் ஓய்வு = மொத்தம் 13 நாட்கள்

3 நிகழ்ச்சிகள் அல்லது ஏதேனும் ஒன்று அல்லது இரண்டு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளலாம்

**தகுதி**

**நிகழ்ச்சி A & B** : கட்டம் 1
**நிகழ்ச்சி C** : கட்டம் 3

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் : +919841272146

என் அன்புள்ள ஆல்ஃபா சித்தர்களே,

மீண்டும் அன்புடன் ஆசியுடன் எழுதுகிறேன்.

சென்ற வாரம் வகுப்புகளுக்காக மதுரையில் இருந்தேன். 60 வயது மதிக்கத்தக்க ஒருவர் நமது முதல் கட்டம் வகுப்பில் இருந்தார். உறவுகள் பற்றி நாம் பேச ஆரம்பித்தவுடன் அவர் ஒரு கேள்வி எழுப்பினார். எனக்கு திருமணமாகி 35 வருடங்கள் ஆகின்றன. ஆரம்பத்திலிருந்தே என் மனைவி மிகவும் எதிர்மறையாகவே பேசுவார். மிகவும் சத்தமாக பேசுவார். என்னை மட்டுமின்றி வீட்டில் அனைவரது மனமும் புண்படும்படி பேசி வருகிறார். அவரால் எனக்கு வாழ்க்கையே கசந்து போய்விட்டது. அவரை மாற்ற முடியுமா?

ஆல்ஃபா தியானத்தில் அவரது மனைவியின் ஆழ்மனதுடன் பேசி அவரிடம் நல்ல மாற்றத்தை கொண்டு வர முடியும் என்று நான் விளக்கியதும் அவர் சந்தோஷப்பட்டார்.

இருப்பினும் நான் சற்று யோசித்தேன். சமீப காலத்தில் இது போன்ற சூழ்நிலைகளை பலரது வாழ்க்கையில் பார்த்து வருகிறேன். ஒரு வீட்டில் ஒரு மனிதர் இப்படி எதிர்மறையாக இருப்பதால் அந்த வீட்டில் இருக்கும் மற்ற அனைவரது வாழ்வும் நரகமாகி விடுகிறது. ஒரு மனிதர் அனைவரது மனதிலும் தினம் தினம் வலியை ஏற்படுத்தி விடுகிறார். ஒரு மனிதர் அனைவரது மன நிம்மதியையும் குலைத்து விடுகிறார். ஒரு மனிதர் அந்த வீட்டை சொர்க்கத்திற்கு பதிலாக நரகமாக்கி விடுகிறார். இது ஏன்?

இது பொன்ற பல மனிதர்களுடன் தனிப்பட்ட ஆலோசனைகளில் பேசி இருக்கிறேன். அவரது வாழ்வில் ஏதோ ஒன்று பிடிக்காமல் இருப்பது தெரிந்தது. அது ஒரு சம்பவமாக இருக்கலாம் அல்லது அவரது பார்வையில் அவருக்கு நடந்த அநீதியாகவும் இருக்கலாம். சில சமயம் ஒரு நல்ல வாய்ப்பை இழந்திருப்பார். அல்லது நெருங்கிய ஒருவரது இழப்பாகவும் இருக்கலாம். காரணங்கள் பல. ஆனால் இங்கு கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்று தான். இப்படிப்பட்ட ஒரு மனிதர் தான் சந்தோஷமாக வாழ முடியும் என்பதையே அறியாதவராக இருப்பது மட்டுமல்லாது மற்றவர்களுக்கும் அந்த வாய்ப்பு கிடைக்காமல் செய்து விடுகிறார்.

இங்கு தேவை ஒன்றே ஒன்று தான். பழைய விஷயங்களை மறந்து விட்டு அவர் இன்று தனது வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்பது தான். இது சொல்வது சுலபம் ஆனால் செயல் படுத்துவது சிரமம் என்பது உண்மை தான்.ஆனால் நாம் எதை இழந்து கொண்டிருக்கிறோம் என்று யோசித்து பார்த்தால் இந்த சுமையை இறக்கி வைத்து விட்டு ஒரு மனிதன் எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ முடியும். உங்களுக்குள்ளும் சந்தோஷத்தை உணர முடியும் மற்றவர்களுக்கும் அதை அளிக்க முடியும்.

ஒரு சிலர் இதை மிக சுலபமாக செய்து விடுகிறார்கள். அவர்களுக்கு பிரச்சினைகளே இல்லை என்று அர்த்தமா? கசப்பான நினைவுகளே இல்லை என்று அர்த்தமா? இல்லை. இப்படிப்பட்டவர்கள் இதையெல்லாம் கடந்து வாழ்வில் மகிழ்ச்சியை உணர கற்றிருக்கிறார்கள் என்பதே உண்மை.

ஆல்ஃபா மூலம் வாழ்வில் எதையும் சமாளிக்க நம்மிடம் பல கருவிகள் இருக்கின்றன. எதிர்மறை சக்தி உருவாக ஒரு ஆல்ஃபா சித்தர் காரணமாக இருக்க கூடாது. ஆல்ஃபா நிலையில் நம் மனதில் உள்ள தீய எண்ணங்கள் மற்றும் உணர்வுகளை களைந்து நல்ல எண்ணங்களையும் உணர்வுகளையும் கொண்டு நம்மால் மாற்றி அமைக்க முடியும். நமது “தீய எண்ணங்கள் களைதல்” தியானத்தின் மூலம் இது முடியும்.

ரிஷிகேஷில் நடைபெறும் நமது **சாந்தக்னி** வகுப்பில் இது இன்னும் மிக சக்தி வாய்ந்த முறையில் செய்யப் படுகிறது.

ஒரு ஆல்ஃபா சித்தர் என்ற முறையில் உங்கள் இலட்சியங்கள் கனவுகள் அத்தனையும் நிறைவேற வேண்டும் என்பதே எனது ஆசை. ஆனால் எனது மிகப் பெரிய ஆசை ஒவ்வொரு ஆல்ஃபா சித்தரும் ஆல்ஃபா மூலம் தனது மனதை முற்றிலும் தூய்மை படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தான். ஒவ்வொரு ஆல்ஃபா சித்தரும் ஆல்ஃபா மூலம் தனது மனதை தூய்மைபடுத்தி தனது வாழ்க்கையில் நல்ல சக்தி மட்டுமே இருக்கும்படி செய்ய வேண்டும். ஒவ்வொரு ஆல்ஃபா தியானமும் உங்களை தூய்மைபடுத்துகிறது. தொடர்ந்து தியானம் செய்யுங்கள்.

ஒவ்வொரு ஆல்ஃபா சித்தரும் ஓர் ஒளி விளக்காக இருந்து மற்றவர்கள் வாழ்வில் ஒளி கொடுக்க வேண்டும். **“ஒவ்வொரு மனித மனமும் நல்ல எண்ணங்களை மட்டுமே உருவாக்குகின்றது”**.

சிறப்பான தியானங்கள் உங்களுக்கு அமையட்டும்.

ஆசீர்வாதங்கள்,

**ஸ்ரீமாதா**



*Guruji with Alpha siddhas at Agnikundam Workshop in Chennai*



*Guruji with Alpha siddhas at Psychic Energy Workshop in Madurai*



*Guruji with Alpha siddhas at Level -2 workshop in Madurai*






*Guruji at with Alpha Siddhas at one day yatra to Maha Meru temple and Sri Bala peedam Nemili,*

I attended Shantagni workshop at Rishikesh in 2015. Those 5 days with Guruji became a significant turning point in my life. After that, I feel relaxed and very content. There is no worry about anything. Earlier I used to hurt myself with low self esteem. But now, I am able to accept myself and feel more confident. Self Pity has disappeared from my system. I am able to be non judgmental and accept people/situations as they are. My irregular periods , which was troubling me for past 2.5 years has now stabilised.. The problem was in the mind! Forever Thanking You Dear Srimathaji, for the unique and exclusive workshop! **Jaya Piriyadharshini H , Bengaluru.**

I attended some Alpha classes and felt a lot of transformation within myself. But somewhere deep within me there was always a regret about my life. Why did I have to go through so many difficulties? Why me? This was a question in my mind always. When I attended Siddha Kundalini class, Guruji explained about karma very beautifully. I understood very clearly why certain things were not ok in my life. Now I am able to live peacefully. With this new awareness I feel that I am able to bear my sanchita karma, I am able to resolve my praraptha karma very easily and the best is that I do not create any akamya karma. Situations have not changed in my life. But that class has changed me! Life has become better. Million thanks Guruji! **Sankari, Chennai.**

Right from childhood I have always admired my mother for her time management, neatness, discipline in everything that she did. Somehow, I did not seem to have imbibed these qualities from her. Many times I have felt ashamed at my own untidiness and laid back style of life. Then I started my journey with Alpha, that also with my mother's persuasion only. Finally I attended Amrit Siddhi class. That was a wonderful class. I started practising that mind blowing meditation. Now, after about six months, I suddenly realised that I had become more like my mother. I was very meticulous about everything I did! This came as a surprise to me. I wondered what brought about that change. And then, it struck me. In Amrit Siddhi class Guruji does the DNA activation meditation. I guess, when that happened those good qualities from mother which were dormant within me got activated! This is really miraculous! Love you Guruji for this beautiful realisation and transformation! **Sinduja, Coimbatore**

ரிஷிகேஷில் சாந்தக்னி வகுப்பில் 2015 ல் கலந்து கொண்டேன். குருஜியுடன் கழித்த அந்த 5 நாட்கள் எனது வாழ்க்கையில் ஒரு மிகப் பெரிய திருப்பு முனையாகவே அமைந்து விட்டது. அதன் பிறகு என் மனதில் நிம்மதியும் திருப்தியும் நிறைந்து விட்டது. எதைப்பற்றியும் கவலை இல்லாத ஒரு நிலையை உணர்கிறேன். முன்பெல்லாம் என்னைப் பற்றியே ஒரு தாழ்வு மனப்பான்மையுடன் இருந்தேன். ஆனால் இப்பொழுது என்னை நான் ஏற்றுக் கொண்டேன். தன்னம்பிக்கையுடன் இருக்கிறேன். தன்னிரக்கம் மறைந்து விட்டது. மற்றவர்களையும் அப்படியே ஏற்றுக்கொள்ள முடிகிறது. கடந்த 2.5 வருடங்களாக சரியாக வராமல் இருந்த மாதவிடாய் இப்பொழுது ஒழுங்காகி விட்டது. பிரச்சினை எனது மனதில் தான் இருந்தது என்பது புரிந்தது. இவ்வளவு சிறப்பான நிகரில்லாத வகுப்பை அளித்த ஸ்ரீமாதாவிற்கு எனது நன்றி என்றென்றும் உரித்தாகுக.

**ஜெய ப்ரியதர்ஷினி, பெங்களூரு.**

பல ஆல்ஃபா வகுப்புகளில் கலந்து கொண்டிருக்கிறேன். எனக்குள் மிகுந்த மாற்றத்தை உணர்ந்திருக்கிறேன். ஆனால் என் வாழ்வைப் பற்றி ஏதோ ஒரு குறை எனக்குள் ஆழமாக பதிந்திருந்தது. வாழ்வில் எனக்கு ஏன் இத்தனை பிரச்சினைகள்? எனக்கு மட்டும் ஏன் இப்படி? இந்த கேள்வி என் மனதில் எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும். சித்த குண்டலினி வகுப்பில் கலந்து கொண்ட பொழுது குருஜி கர்மாவைப் பற்றி மிக நல்ல விளக்கம் கொடுத்தார். என் வாழ்வில் சில விஷயங்கள் ஏன் சரியாக இல்லை என்பது அப்பொழுது எனக்கு புரிந்தது. இப்பொழுது நான் நிம்மதியாக இருக்கிறேன். இந்த புதிய புரிதலினால் எனது சஞ்சித கர்மாவை எளிதாக சுமக்க முடிகிறது, பிராரப்த கர்மாவை எளிதாக முடிக்க முடிகிறது, எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக மேற்கொண்டு அகாம்ய கர்மாவை உருவாக்குவதையும் தவிர்க்க முடிகிறது. எனது வாழ்வில் சூழ்நிலைகள் எதுவும் மாறவில்லை. ஆனால் அந்த வகுப்பு என்னை மாற்றி விட்டது. வாழ்க்கை மாறி விட்டது. கோடானு கோடி நன்றி குருஜி!

**சங்கரி, சென்னை**

சிறு வயதிலிருந்தே எனது தாயாரைப் பார்த்து வியந்திருக்கிறேன். அவர் நேரத்தை திட்டமிட்டு பயன்படுத்தும் முறை, சுத்தம், எதிலும் ஒரு நேர்த்தி எல்லாமே வியப்பாக இருக்கும். ஏனோ அவரது இந்த நல்ல குணங்கள் எதுவுமே என்னிடம் வந்து சேரவில்லை. பல முறை எனது சோம்பேரித்தனம் மற்றும் வாழ்க்கை முறையைப் பற்றி வெட்கப்பட்டிருக்கிறேன். பின்னர் ஆல்ஃபாவுடன் எனது பயணத்தை துவக்கினேன், அதுவும் எனது தாயின் வற்புறுத்தலால் தான். கடைசியாக அம்ருத சித்தி வகுப்பில் கலந்து கொண்டேன். அது ஒரு அற்புதமான வகுப்பு. மனம் மயக்கும் அந்த தியானத்தை பழகத் துவங்கினேன். இப்பொழுது, ஆறு மாதங்கள் கழித்து, நான் மெல்ல மெல்ல எனது தாயைப் போல மாறி வருவதை உணர்கிறேன். ஒவ்வொரு விஷயத்திலும் கூர்ந்து கவனம் செலுத்தி வருகிறேன். எனக்கே இது சற்று அதிசயமாக இருக்கிறது. எப்படி இந்த மாற்றம் வந்தது என்று யோசித்தேன். அப்பொழுது தான் அதை உணர்ந்தேன். அமிர்த சித்தி வகுப்பில் குருஜி DNA யை தட்டி எழுப்பும் ஊக்குவிக்கும் தியானத்தை செய்வித்தார்கள். அப்பொழுது எனக்குள் மறைந்திருந்த எனது தாயின் நல்ல குணங்களும் தட்டி எழுப்பி விடப்பட்டன என்பதை உணர்ந்தேன். இது ஒரு அதிசயம் தான். இந்த அழகான அனுபவம் மற்றும் மாற்றத்திற்கு உங்களுக்கு எனது அன்பை காணிக்கையாக்குறேன் குருஜி! **சிந்துஜா, கோவை**

***Guruji's TV programs are telecast in these channels. Don't miss them!***

**MAKKAL TV**

Saturdays, 9:00 AM

**POTHIGAI TV**

Mondays, 1:30 PM

***Recordings of the programs can be viewed on our website www.alphamindpower.net***

***AMP is on Facebook & WhatsApp! Connect with us to receive latest updates on upcoming events, useful articles, & share alpha experiences with fellow alpha siddhas. Not connected yet? Send us a whatsapp message on +917358595493 to get connected***

AMP பேஸ்புக் மற்றும் வாட்ஸ்அப் குரூப்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. இதன் மூலம் சுலபமாக நாம் தொடர்பு கொள்ளவும் முக்கியமான செய்திகளை பகிரவும் முடியும். நீங்கள் ஏதேனும் குரூப்பில் இல்லாவிட்டால், உங்கள் மொபைல் நம்பரிலிருந்து +917358595493 என்ற நம்பருக்கு ஒரு வாட்ஸ்அப் செய்தி அனுப்பினால் நீங்கள் வாட்ஸ்அப் குரூப்பில் இணைக்கப்படுவீர்கள்

**Face book link:** https://www.facebook.com/groups/alphamindpower/



## Upcoming classes' schedule

NOTE: Please call & register with AMP office before attending any of the workshops

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Rishikesh Camp | Rishikesh<br>Babaji Cave<br>Shantagni Workshop | 19/04/17 to 22/04/17<br>23/04/17 to 25/04/17<br>26/04/17 to 01/05/17 | | | Rishikesh |
| Chennai (Tamil) | Level – 2<br>Level – 3<br>Amrut Siddhi<br>Level – 1 | 04/05/17<br>05/05/17<br>06/05/17<br>07/05/17 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar Road, T.Nagar, Chennai |
| Bangalore (English) | Level – 2<br>Level – 3<br>Siddha Kundalini<br>Level – 1 | 11/05/17<br>12/05/17<br>13/05/17<br>14/05/17 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Akshaya Aura, 6, Kalidasa Marg, Gandhi Nagar, Bangalore |

*Printed & Published for*

ALPHA MIND POWER™
"Power of the Subconscious Mind"

*Dr. Vijayalakshmi Panthaiyan*
*ALPHA MIND POWER*
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai – 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841696664*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*

*PRINTED MATERIAL*